සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வி திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

දෙවන වාර පරීක්ෂණය - 2017 | 06ශ්‍රේණිය
**இரண்டாம் தவணைப்பரீட்சை – 2017** | **தரம்** 06
**Second Term Test - 2017** | **Grade** 06

විද්‍යාව **I**
விஞ்ஞானம் I
***Science 1***

කාලය : පැය 02
**நேரம் :02மணித்தியாலம்**
***Time : 02 hour***

**சுட்டெண் /மாணவர்பெயர்:-…………………………….**
**கவனிக்குக :- எல்லா வினாக்களுக்கும் விடைத்தருக**
**பகுதி I இல் மிகவும் பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.**

## பகுதி I

(01). சுவட்டு எரிப்பொருளுக்கு உதாரணமாக அமைவது,
1. நிலக்கரி 2. பெற்றோலிய எண்ணெய்
3. பெற்றோலிய வாயு 4. கரு சக்தி

- பின்வரும் கூற்றுக்களை கொண்டு (02), (03),(04) ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க. .

A – நேரத்துடன் பருமன் அதிகரிக்கும்.

B – சிறிய வயதில் பாலை உறிஞ்சி குடிப்பதன் மூலம் பசியை தீர்த்து கொள்ளும்

C – ஓட்சிசன் வாயுவை பெற்று சுவாசத்தை மேற்கொள்ளும்.

D –தமது இனத்தை இனப்பெருக்குவதில்லை.

(02). தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் உயிருள்ளவை தொடர்பான உண்மையானவை,
1. A மட்டும் 2. A,B மடடும் 3. A,B,Cமட்டும் 4. மேலுள்ள அனைத்தும்

(03). கமல் முன்வைத்த கூற்றுக்களில் உயிரற்றவற்றில் காணப்படும் இயல்புகளாவன,
1. A மட்டும் 2. B மட்டும் 3. C மட்டும் 4. Dமட்டும்


(04). கமல் முன்வைத்த கூற்றுகளின் அடிப்படையில் அவர் அவதானித்த விலங்கு எது?
1. கோழி 2. கொரலியா 3. நாய் 4. தாரா

(05). பொய்யான கூற்றினை தெரிக,
1. வெற்றுக்கண்ணால் அவதானிக்ககூடிய சிறிய அங்கி நுண்ணங்கியாகும்.
2. தாவரங்கள் தற்பேசணிகளாகும்.
3. தாவரங்கள் உற்பத்தியாக்கும் உணவில் நேரடியாக,மறைமுகமாக தங்கி வாழும் அங்கி பிறப்போசனிகளாகும்.
4. எல்லா அங்கிகளும் இனத்தை பெருக்கும்.

(06). பொய்யான கூற்றைத் தெரிக.


1. வேலை செய்யும் ஆற்றல் சக்தி எனப்படும்.
2. சூரியகலங்களில் மின்னை உற்பத்தியாக்குவதற்கு சூரிய சக்தி பயன்படும்.
3. முதன்மையான இயற்கை சக்தி முதல் சூரியனாகும்.
4. சக்தி முதலுக்கு உதாரணமாக சூரியனை கூறமுடியாது.

(07). ஆசிரியரினால் திரவமொன்றின் கனவளவை அளவிடுவதற்கு மாணவர்களுக்கு அளவுச்சாடி வழங்கப்பட்டுள்ளது, அளவுச்சாடியை பயன்படுத்தி அளவீடுகளை பெற்ற விதம் காட்டப்பட்டுள்ளது இங்கு சரியான அளவீட்டை குறிக்கும் விடை எது?




1. A – 12 ml  2. B –11 ml  3. C –11.5 ml  4. D –11.2 ml

(08). நீர் பாத்திரத்தினுள் வாய் கவிழ்ந்த வெற்றுப் போத்தலை அமிழ்த்தி அதனை சாய்வாக சரித்தால் வாயுக்குமிழ்கள் வெளியேறும் விதம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் விளங்கிக் கொள்வது,



1. போத்தல் விரைவாக அமிழும்.
2. போத்தலினுள் நீர் சேரும்.
3. வளி வெளியில் இடத்தை பெறும்.
4. போத்தல் வெற்றிடமாக காணப்படுகிறது.

(09). சுயாதீனமாக தொங்கவிடப்பட்டுள்ள காந்தத்தின் அமைவிடம் தொடர்பான சரியான கூற்றினைத் தெரிக.

(1) காந்தத்தின் வடமுனை புவியின் தென்முனையை நோக்கி இருக்கும்.

(2) காந்த்தின் தென்முனை புவியின் வடமுனையை நோக்கி இருக்கும்.

(3) காந்தத்தின் தென்முனை புவியின் தென்முனைக்கும் இடையே தொடர்பில்லை.

(4) காந்தத்தின் வடமுனை புவியின் வடமுனையை நோககி இருக்கும்.

(10). பின்வருவனவற்றுள் திட்டமான வடிவத்தைக் கொண்டதும் திட்டமான கனவளவைக் கொண்டதுமான பதார்த்தம் எது?

1.தேங்காய்யெண்ணெய் 2. கற் துண்டு 3. ஒட்சிசன் 4. தீந்தை

(11). மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிக,

1. படிவு வீழ்ச்சி என்பது மழையாக நீர் புவியை அடைதலாகும்.
2. மேற்பரப்பு நீருக்கு உதாரணமாக சமுத்திரம்,கடல் நீருமாகும்.
3. நீர் காணப்படும் வடிவத்துக்கு ஏற்ப மேற்பரப்புநீர், நிலக்கீழ் நீர் என 02 வகைப்படும்
4. நீர்வீழ்ச்சியிலுள்ள நீர் மேற்பரப்பு நீராக கருதப்படமாட்டாது.

(12). ஒளியின் மிக முக்கிய பயனாக கருதக்கூடியது எது?

1. இதய சத்திரசிகிச்சைக்கு லேசர் கதிர் பயன்படுத்தல்.
2. தொடர்பாடல் செயற்பாடுகளுக்கு ஒளியியல் நாரகள் பயன்படுகின்றது.
3. தாவரங்கள் உணவை தயாரித்தல்.
4. பார்வை கிடைத்தல்.

(13). காந்தம் பயன்படாத சந்தர்ப்பமாவது,

(1) சிறிய மோட்டர் (2) பென்சில் பெட்டி
(3)எல்லா விளையாட்டு பொருட்களிலும் (4) சில சதுரங்க பலகைகளில்

14). உவர்தன்மை குறைந்ததிலிருந்து அதிகரிக்கும் ஒழுங்கில் ஒழுங்கமைக்கப்பட்ட விடையாவது,

1. உவர்நீர்,நன்னீர்,சவர்நீர் 2. உவர்நீர்,சவர்நீர்,நன்னீர்
3. நன்னீர்,உவர்நீர்,சவர்நீர் 4. நன்னீர்,சவர்நீர்,உவர்நீர்


(15). கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியான கூற்றை தெரிக,

(1) பறவைகளின் ஒலி செயற்கை ஒலியாகும்.
(2) நாய் குரைக்கும் ஒலி செயற்கை ஒலியாகும்.
(3) காற்றின் சத்தம் செயற்கையான ஓலியாகும்.
(4) கிட்டாரின் ஒலி செயற்கை ஒலியாகும்.

(16). நீர் மாசடைவதை தவிர்க்க மேற்கொள்ள கூடிய செயற்பாடாவது,

1. நீரை மாசடைய செய்பவர்களுக்கு தண்டனை வழங்குதல்.
2. நீருக்கு கழிவுகளை இடும் தொழிற்சாலைக்கு சட்ட நடவடிக்கை எடுத்தல்.
3. நீருக்கு சேர்க்கப்படும் சலவை பதார்த்தங்களின் அளவை குறைத்தல்.
4. இரசாயன பீடைநாசினிகளின் பயன்பாட்டை தடைசெய்தல்.

(17). A எனும் பொருள் வெளியிடும் ஒளியானது தெறிப்படைந்து B இல் தெறிப்படைந்து படத்தில் உள்ளவாறு கண்ணை அடைகிறது.



கீழுள்ளவற்றுள் பொய்யான கூற்றைத் தெரிக.

1. A பிரகாசமான பொருளாகும் 2. B பிரகாசமான பொருளாகும்

3. A ஒளி முதலாகும். 4. B ஒலி முதலாகும்.


(18) சங்கு சத்தத்திற்கு ஒத்த ஒலியை எழுப்பும் கருவி எது?

(1) கிட்டார் (2) றபான் (3) மேளம் (4) புல்லாங்குழல்

(19). பூ கண்ணாடி இடப்பட்ட ஜன்னல் வழியாக பார்த்தவுடன் வெளிச்சம் தெரியும் எனினும் பொருட்கள் தெரிவதில்லை காரணம் பூகண்ணாடி ……………… பதார்த்தம் என்பதால்.

1. ஊடுகாட்டுபவை 2. கசியவிடுபவை 3. ஊடுகாட்டதவை 4. முறிவடையும்.

(20). காந்தத்தில் இணைக்கப்பட்ட விளையாட்டு உபகரணம் படத்தில் காட்டப்பட்டுள்ளது .N,S என்பன முறையே வடமுனை,தென்முனை ஆகும்.




முன்
பின்

(1) சட்டக்காந்தத்தின் N மற்றும் S முறையே பொருளின் N அருகில் கொண்டு செல்லுதல்.

(2) சட்டக்காந்தத்தை S மற்றும் N முறையே பொருளின் N அருகில் கொண்டு செல்லுதல்.

(3) சட்டக் காந்த்தின் N யை பொருளின் N அருகில் கொண்டு செல்லுதல்

(4) சட்டக் காந்ததின் S யை பொருளின் S அருகில் கொண்டு செல்லுதல்.

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடைத்தருக.**

(01) (a)

| | A | B | C |
|---|---|---|---|
| வடிவம் | திட்டமானது இல்லை | திட்டமானது இல்லை | திட்டமானது |
| கனவளவு | திட்டமானது | திட்டமானது இல்லை | திட்டமானது |

A, B, C என்பன சடப்பொருட்களின் மூன்று நிலைகளாகும்,இங்கு A, B, C சந்தர்ப்பங்களை பெயரிடுக. ( பு 03 )

(i) A : ........................ (ii) B : ........................... (iii) C: .............................

(b) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் இடைவெளிகளை நிரப்ப பொருத்தமாக " √ " அடையாளத்தை அல்லது " X " அடையாளத்தை இடுக .( பு 04 )

| | வெளியில் இடத்தை கொள்ளும் | திணிவு உண்டு |
|---|---|---|
| சடப்பொருள் | (i) ......................... | (ii) ................. |
| சக்தி | (iii) ..................... | (iv) .................. |

(c) (i) இரும்பு கம்பியினை இழுத்தவுடன் நீளம் அதிகரித்தது,இவ்வியல்புக்கு வழங்கும் பெயரை எழுதுக? ( பு 01 )

(ii) பிளாத்திக்கு மீளும் நாடாவை இழுக்கும் போது இழுப்படுவதுடன்,விசையை அகற்றியதும் பழைய நிலையை அடையும்,இவ்வியல்புக்கு வழங்கும் பெயர் யாது? ( பு01 )

(d) பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படும் சக்தி முதலை பெயரிடுக? ( பு 03 )

(i) வெயிலில் ஆடைகளை உலர்த்துதல்.
(ii) நெல் அறுவடையின் பின் பதர்களை அகற்றுதல்.
(iii) துடுப்புகள் மூலம் படகினை செலுத்துதல்.

(e) எமது அன்றாட வாழ்வில் சக்தி நுகர்வை குறைப்பதன் மூலம் அதனை மீதப்படுத்தி கொள்ளலாம்,சக்தியை சிக்கனமாக பயன்படுத்த பின்வரும் சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய முறையை காட்டுக. ( பு04 )

(i) நீர் குழாயில் நீரை அருந்துதல்.
(ii) ஆடைகளை அழுத்துதல்.
(iii) வீட்டினுள் மின்குமிழ்களை ஒளிர்வித்தல்.
(iv) ஆடைகளை உலர்த்துதல்.

(02) நீர் என்பது விலை மதிப்பிட முடியாத வளமாகும்.

(a) (i) நீர் மனிதனுக்கு மிகவும் பெறுமதி மிக்க வளமாவதற்கான 02 காரணங்களை எழுதுக? (பு02)

(ii) தாவரங்களுக்கு நீரினால் கிடைக்கும் பயன்கள் 02த் தருக? ( பு 02 )

(iii) பொதி செய்யப்பட்ட நீரை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்பொன்றினை தருக?(பு01)

(b) பின்வரும் சந்தர்ப்பங்களில் நீர் மாசடையும் வழிமுறைகளை தருக. ( பு 03 )

(i) குளித்தல்.
(ii) வாகனங்களை கழுவுதல்.
(iii) நெற் செய்கையில்.

(c) பின்வரும் சந்தர்ப்பங்களில் நீர் மாசடைதலை தடுக்க மேற்கொள்ள கூடிய செயற்பாட்டினை எழுதுக. (பு03 )

(i) குளித்தல்
(ii) சுற்றுலா செல்லுதல்,
(iii) நெற் செய்கை.

03) இடைவெளிக்கு பொருத்தமான செல்லை தெரிந்து எழுதுக. (பு11 )

( சுண்ணாம்பு நீர், விலங்கு, ஒளித்தொகுப்பு, தற்போசணி, வளர்ச்சி, சுவாசம், கடல்அனிமனி, பச்சையத்தின், காபனீர்ரொட்சைட்டு, பிறப்போசணி, ஒட்சிசன்)

(i) பருமனில் அதிகரித்தல் ......................................................என அழைக்கப்படும்.

(ii) தாவரங்கள் ...................................................... என அழைக்கப்படும்.

(iii) பச்சை தாவரங்களில் நீர், ...................................................... மற்றும் சூரியசக்தியை பயன்படுத்தி உணவு தயாரிக்கும் செயற்பாடு .................................................என அழைக்கப்படும்.

(iv) தாவரங்களில் நேரடியாக அல்லது மறைமுகமாக தங்கி வாழும் அங்கிகள் ...................................................... என அழைக்கப்படும்.

(v) ......................................................இடப்பெயர்ச்சியடையாத ஆனால் அசைவை காட்டும் விலங்காகும்.

(vi) காபனீர்ரொட்சைட்டு வாயுவை இனங்காண ......................................................பயன்படும்.

(vii) தாவரங்களின் இலை பச்சை நிறமாவதற்கு காரணம் ...................................................... நிறத்தினால் ஆகும்.


(viii) தாவர உணவு உற்பத்தி செயற்பாட்டில் சூழலுக்கு சேரும் வாயு ............................................... ஆகும்

(ix) அங்கிகளினுள் சக்தியை உற்பத்தி செய்யும் செயன்முறை ...................................................... ஆகும்.

(x) ...................................................... வளர்ச்சி குறித்த காலத்திற்கு மாத்திரமே நடைப்பெறும்.

(04) பொருளொன்றை பார்ப்பதற்கு கண்ணும் ஒளியும் அவசியமாகும்.

படத்தில் காட்டப்பட்டிருப்பது அறையினுள் காணப்படும் மின்குமிழும்,பந்துமாகும்.





(i) B இடத்தில் இருப்பவருக்கு பந்தினை பார்ப்பதற்கு ஒளி பயணம் செய்ய வேண்டிய பாதை எது? (பு 02 )

(ii) மின்குமிழுக்கும் பந்துக்குமிடையே புத்தகம் ஒன்றை வைத்தால் பொருள் தெரியவில்லை அதற்கான காரணத்தை தருக? (பு01 )

(iii) B யில் நிற்பவருக்கும் பந்துக்கும் இடையே புத்தகத்தை வைத்தால் பந்து தெரிவதில்லை அதற்கான காரணத்தை தருக? (பு01 )

(iv) மேலே குறிப்பிட்ட இருசந்தர்ப்பங்களிலும் பந்த தெரியாமல் இருப்பதற்க காரணம் ஒளியின் இயல்பொன்றாகும் அவ்வியல்பாவது? ( பு 01 )


(v) C என்பது மின்குமிழ் A என்பது பந்து எனில் தரப்பட்டுள்ள உருவை விடைத்தாளில் பிரதி செய்து பந்தின் நிழல் தோன்றும் இடத்தை குறித்து காட்டுக. ( பு 02 )




(vi) பொருளை பார்ப்பதற்கு உதவும் ஒளிக்கதிர்கள் இரண்டையும் உருவில் குறித்து காட்டுக? (பு02)

(vii) இங்கு புத்தகம் தொழிற்படுவது ஒளியை ஊடுகாட்டாத பொருளாக, எனில் கண்ணாடியும், திசுத்தாளும் தொழிற்படுவது எவ்வகை பதார்த்தமாக என தனித்தனியாக தருக? (பு02 )

(05) படத்தில் காட்டப்பட்டிருப்பது தரம் 6 மாணவனால் அமைக்கப்பட்ட மணியாகும்.




(a) இறப்பர் நாடாவை ஒருபக்கமாக இழுத்து விடப்படுகிறது.

(i) அவதானங்கள் 02 த் தருக? ( பு02 )

(ii) நன்றாக அவதானிப்பினை பெற மேற்கொள்ள வேண்டியது யாது? ( பு01 )

(iii) பித்தளை மூடியை இலேசாக தொட்டால் உணரக்கூடிய மாற்றம் என்ன? (பு01 )

(iv) பித்தளை மூடியை அழுத்தி தொட்டால. உணரக்கூடிய மாற்றம் என்ன? (பு 01 )

(v) இங்கு பயன்படுவது இறப்பர் பட்டியின் எவ்வியல்பாகும்? (பு01 )

(b) மாணவன்னொருவன் மேலுள்ள மாதிரியின் அருகில் காந்தத்தை கொண்டுச் சென்றால் மேலுள்ள அவதானிப்பை தொடர்ச்சியாக பெறலாம் என கூறுகின்றான்.

(i) இவ்வாறு நடைபெறுவதற்கு இரும்பு கொண்டுள்ள சிறப்பியல்பு யாது? (பு1 )

(ii) இரும்பானிக்கு பதிலாக பித்தளை ஆணியை பயன்படுத்த முடியுமா?

காரணத்தை தருக? (பு02)

(iii) காந்தத்தை இணைக்க வேண்டிய முறையை வரைந்து காட்டுக? (பு02 )